


ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி




மலர் 3 சென்னை | தினசரி | 4 பக்கம் சனிக்கிழமை, செப்டம்பர் 30, 2023 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 78

# தமிழ்நாடு காவல் அருங்காட்சியகம் 2ம் ஆண்டு விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும் காவல் ஆணையாளர் காவல் அருங்காட்சியகம் அஞ்சல் அட்டை மற்றும் சிறப்பு தபால் உறைகளை வெளியிட்டு, போட்டிகளில் வென்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினர்

சென்னை, செப்டம்பர் 30, 2023: சென்னை, எழும்பூர், பாந்தியன் சாலையில் உள்ள பழைய காவல் ஆணையரக கட்டிடம் 2013ம் ஆண்டு வரை சென்னை பெருநகர காவல் ஆணையரகமாக, சுமார் 150 ஆண்டுகளாக இயங்கி வந்தது. 2013ம் ஆண்டு வேப்பேரியில் புதிய காவல் ஆணையரகம் திறக்கப்பட்ட பிறகு இந்த கட்டிடத்தை பாரம்பரியமிக்க கட்டிடமாகவும், சென்னை பெருநகர காவல்துறையின் அடையாளமாகவும் பராமரிக்க, தமிழக அரசு உத்தரவின்பேரில், சுமார் ரூபாய் 6.47 கோடி செலவில் தமிழ்நாடு காவல் அருங்காட்சியகமாக புனரமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 28.09.2021 அன்று தமிழ்நாடு காவல் ஆருங்காட்சியகத்தை திறந்து வைத்தார். தமிழ்நாடு காவல் தலைமை இயக்குநர் திரு.சங்கர் ஜிவால், இ.கா.ப., மற்றும் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.சந்தீப் ராய் ரத்தோர், இ.கா.ப, ஆகியோர் இன்று (29.09.2023) எழும்பூர், காவல் அருங்காட்சியகத்தில் தமிழ்நாடு காவல் அருங்காட்சியகத்தின் 2ம் ஆண்டு நிறைவு விழாவை துவக்கி வைத்தனர். பின்னர், சென்னை பெருநகர காவல் சார்பில், 2ம் ஆண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட மாறுவேடம், பேச்சுப்போட்டி, கட்டுரை போட்டி உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மற்றும் காவல் சிறார், சிறுமியர் மன்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினர். மேலும், மூத்த பொது தபால்துறை அதிகாரி, தமிழ்நாடு வட்டம், திருமதி.யி.சாருகேசி, இ.அ.ப. அவர்கள், தமிழ்நாடு காவல் அருங்காட்சியகத்தின் சிறப்பு தபால் அட்டை மற்றும் தபால் உறையை வெளியிட, தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் திரு.சங்கர் ஜிவால், இ.கா.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்.. முன்னதாக இன்று (29.09.2023) காலை 11.00 மணியளவில் காவல் மோப்ப நாய் கண்காட்சியும், நண்பகல் 12.00 மணிக்கு காவல் வாத்தியக்குழுவின் இசை நிகழ்ச்சியும், மாலை 3.00 மணியளவில், ''போக்குவரத்து விதிகளை கடைபிடி'' என்ற தலைப்பில் விழிப்புணர் நாடகமும். தொடர்ந்து 'ஆன் தி ஸ்டிரீட்ஸ் ஆப் சென்னை'' என்ற இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

தமிழ்நாடு காவல் அருங்காட்சியகத்தில், தமிழ்நாடு காவல்துறையின் பெருமையை பறைசாற்றும் விதமாக, பழங்காலத்தில் இருந்து காவல்துறை பயன்படுத்திய வாகனங்கள், சீருடைகள், பழங்கால ஆயுதங்களான வாள், ரைபிள், ரிவால்வர் முதல் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் ஆயுதங்கள், தடய அறிவியல், கைரேகை, வெடிகுண்டு கண்டறிதல், புகைப்படம் எடுத்தல் போன்றவற்றிற்கு பயன்படுத்திய கருவிகள், மன்னர் காலத்தில் இருந்த காவல் அதிகாரியின் உருவம் கொண்ட 250 ஆண்டுகளுக்கு முந்தைய பழங்கால சிலை என பல அரிய பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு காவல் அருங்காட்சியகத்தின் மிகவும் சிறப்பான கவனஈர்ப்பு, மறுசீரமைக்கப்பட்ட காவல் ஆணையர் அறை ஆகும், இங்கு அப்போதைய ஆணையாளர்கள் முதல் தற்போதைய ஆணையாளர்கள் பயன்படுத்திய பொருட்கள், சாதனங்கள் மற்றும் கலைப்பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. மேலும், அருங்காட்சியகத்தில் பிரத்யேக ஆடியோ-விஷுவல் தியேட்டர் அமைக்கப்பட்டு, பல்வேறு போட்டிகள் மற்றும் தேசபக்தி திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு காவல் அருங்காட்சியகத்தின் வரலாறு மாணவ, மாணவிகளை எளிதில் அடையும் விதமாக, அரசு பள்ளி மற்றும் கல்லூரி, மாணவ, மாணவிகளுக்கு இலவச அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2 ஆண்டுகளாக, பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த காவல் உயர் அதிகாரிகள், வெளிநாட்டவர், பல்வேறு திரைத்துறையினர், தமிழக காவல்துறை, நீதித்துறை, ஆட்சிப்பணி உயர் அதிகாரிகள், காவல் சிறார் மற்றும் சிறுமியர் மன்ற மாணவர்கள், பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் என சுமார் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள், காவல் அருங்காட்சியகத்திற்கு வருகை புரிந்து பார்வையிட்டுள்ளனர்.

இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், காவல்துறை இயக்குநர்கள் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., (த.நா.கா.வீ.வ.க.), திருமதி.சீமா அகர்வால், இ.கா.ப., (தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையம்), தாம்பரம் காவல் ஆணையாளர் திரு.ஏ.அமல்ராஜ், இ.கா.ப., சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையாளர்கள் திரு.கபில்குமார்,




இ.கா.ப.,. இ.கா.ப., (மத்திய (தலைமையிடம்) ஆணையாளர்கள் மற்றும் (தலைமையிடம்), குற்றப்பிரிவு), காவல் திருமதி. ஏ.கயல்விழி, காவல் அதிகாரிகள் திருமதி.சி.மகேஸ்வரி, இணை ஆணையாளர் இ.கா.ப., துணை கலந்து கொண்டனர்.







தூத்துக்குடி பெல் ஹோட்டல் அருகில், உலக இருதய தினத்தை முன்னிட்டு மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்கம் தூத்துக்குடி சார்பில் மருத்துவக்கல்லூரி மாணவர்கள், மாணவியர்கள், செவிலியர்கள் ஆகியோர் கலந்து கொண்ட விழிப்புணர்வு நடைபயண பேரணியை இன்று 29.09.2023 மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். அருகில் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை மரு.டி.எஸ்.செல்வநாயகம் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.அஜய்சீனிவாசன் அவர்கள் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் விரைவில் தொடங்கப்படவுள்ள "Health Walk" திட்டத்தின் கீழ் தூத்துக்குடி ரோச் பார்க் கடற்கரை சாலையில் இன்று 29.09.2023 மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் ஆகியோர் 8 கிலோ மீட்டர் தூரம் நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதையை தேர்வு செய்து உறுதி படுத்துவதற்கான ஆய்வு மேற்கொண்டனர். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.அஜய் சீனிவாசன் அவர்கள், துணை இயக்குனர் சுகாதார பணிகள் மரு.எஸ்.பொற்செல்வன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.




"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## ஆர்.பி. பிலிம்ஸ் ஆர் பி பாலா தயாரிப்பில் வி ஆர் துதிவாணன் இயக்கத்தில் கலையரசன், தீபா பாலு முதன்மை வேடங்களில் நடிக்கும் 'கொலைச்சேவல்'



சென்னை, செப்டம்பர் 30 2023: பரபரப்பு நிறைந்த காதல் கதையான 'கொலைச்சேவல்' திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கை இயக்குநர் பா ரஞ்சித் வெளியிட்டார் சமீபத்தில் திரையரங்குகளில் வெளியாகி பாராட்டுகளையும் வெற்றியும் பெற்ற 'லவ்' திரைப்படத்தை தொடர்ந்து ஆர்.பி. பிலிம்ஸ் ஆர் பி பாலா மற்றும் கௌசல்யா பாலா தயாரிக்கும் இரண்டாவது திரைப்படத்திற்கு 'கொலைச்சேவல்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தின் தலைப்பையும் ஃபர்ஸ்ட் லுக் எனப்படும் முதல் பார்வை போஸ்டரையும் இயக்குநர் பா ரஞ்சித் இன்று வெளியிட்டார். அறிமுக இயக்குநர் வி ஆர் துதிவாணன் எழுதி இயக்கும் இத்திரைப்படத்தில் கலையரசன் கதைநாயகனாக நடிக்க, யூடியூப் குறும்படங்கள் புகழ் தீபா பாலு நாயகியாக திரையுலகில் அறிமுகம் ஆகிறார். பால சரவணனும் அகரன் வெங்கட்டும் முக்கிய பாத்திரங்களில் நடிக்க, மிகவும் வலுவான எதிர்மறை வேடத்தில் இதுவரை குணச்சித்திர பாத்திரங்களில் நடித்த ஆதவன் நடிக்கிறார். கஜராஜ்

உள்ளிட்ட நடிகர்களும் இப்படத்தில் உள்ளனர். 'கொலைச்சேவல்' குறித்து பேசிய தயாரிப்பாளர் ஆர் பி பாலா, "இது ஒரு மிகவும் அழகான காதல் கதை. அனைவரும் ரசிக்கும் வகையில் உருவாகியுள்ளது. அதே சமயம் சமுதாயத்திற்கு தேவையான மிக முக்கியமான கருத்து ஒன்றையும் இப்படம் சொல்லும். குறிப்பாக திரைப்படத்தின் கடைசி 20 நிமிடங்கள் மிகவும் பரபரப்பாக இதுவரை கண்டிராத வகையில் இருக்கும்," என்றார். மேலும் பேசிய அவர், "திறமை வாய்ந்த இளைஞரான துதிவாணனை இப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சி. கலையரசனுக்கு ஒரு திருப்புமுனையாக இந்த திரைப்படம் அமையும். படப்பிடிப்பு நிறைவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகளும் இறுதிக்கட்டத்தை எட்டி உள்ளன. 'கொலைச்சேவல்' மிக விரைவில் திரையரங்குகளில் வெளியாகும்," என்று கூறினார்.

'கொலைச்சேவல்' திரைப்படத்திற்கு பி ஜி முத்தையா ஒளிப்பதிவு செய்ய, சாந்தன் இசையமைத்துள்ளார். படத்தொகுப்பிற்கு அஜய் மனோஜும், கலை இயக்கத்திற்கு சரவண அபிநாமனும், சண்டை பயிற்சிக்கு டேஞ்சர் மணியும் பொறுப்பேற்றுள்ளனர். ஆர்.பி. பிலிம்ஸ் ஆர் பி பாலா மற்றும் கௌசல்யா பாலா தயாரிக்கும் இரண்டாவது படைப்பான 'கொலைச்சேவல்' திரைப்படத்தை வி ஆர் துதிவாணன் இயக்க கலையரசன், தீபா பாலு முதன்மை வேடங்களில் நடித்துள்ளனர். வெகு விரைவில் இப்படம் வெளியாகிறது.

## அகாடமி விருதுகளுக்கான (ஆஸ்கார்) வெளிநாட்டு மொழி பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய திரைப்படம் குறித்த இந்திய திரைப்பட கூட்டமைப்பின் செய்தி குறிப்பு




சென்னை, செப்டம்பர் 30 2023: 2023-ம் ஆண்டுக்கான அகாடமி (ஆஸ்கார்) விருதுகளுக்கான வெளிநாட்டு மொழி பிரிவின் கீழ் இந்திய திரைப்படத்தை தேர்வு செய்யும் இயக்குநர் திரு. கிரிஷ் காசரவல்லி தலைமையிலான குழு 2023-ம் ஆண்டுக்கான அகாடமி விருதுகளுக்கான வெளிநாட்டு மொழி பிரிவின் கீழ் இந்திய திரைப்படத்தை தேர்வு செய்து அறிவித்துள்ளது.

பட்டியலிடப்பட்டிருந்த பல்வேறு படங்களில் இருந்து இந்த குழு '2018 - எவரிஒன் ஈஸ் எ ஹீரோ மலையாள திரைப்படத்தை ஒருமனதாக தேர்வு செய்துள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய திரு. கிரிஷ் காசரவல்லி, கேரளாவில் நடைபெற்ற இயற்கை பேரிடரை மையப்படுத்தி மனிதமே முக்கியம் எனும் கருத்தை '2018 - எவரிஒன் ஈஸ் எ ஹீரோ' மிகவும் சிறப்பாக வெளிப்படுத்தியதாகவும், ஒட்டு மொத்த உலகத்திற்கும் இக்கருத்து பொருந்தும் என்றும் தெரிவித்தார். இந்திய திரைப்பட கூட்டமைப்பின் தலைவர் ரவி கொட்டரக்கரா கூறியதாவது: "பருவநிலை மாற்றத்தின் மோசமான தாக்கங்களை உலகெங்கிலும் நாம் காண்கிறோம். தன்னைத் துன்புறுத்த வேண்டாம் என்று பூமித்தாய் மன்றாடுகிறாள். 2015ம் ஆண்டு சென்னை வெள்ளம், 2018ம் ஆண்டு கேரள வெள்ளம், 2023ம் ஆண்டு இமாச்சல், உத்தரகண்ட் பேரழிவு மற்றும் லிபியாவில் ஏற்பட்ட பேரழிவு போன்ற இயற்கை சீற்றங்களில் ஆயிரக்கணக்கான உயிர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான கோடி பணம் பறிபோனது. இவற்றில் இருந்து பாடம் கற்று, உலகைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். '2018 - எவரிஒன் ஈஸ் எ ஹீரோ' இதைப் பற்றியும் இன்னும் பல விஷயங்களையும் திறம்பட பேசும் ஒரு சிறந்த படமாகும்."

ஆஸ்கார் விருது 2023 க்கான தேர்வுக் குழுவின் பட்டியல்: 1. திரு. கிரிஷ் கசரவல்லி (தலைவர்) - பெங்களூர் - இயக்குனர் 2. திரு. ஜோஷி ஜோசப் - கொல்கத்தா - இயக்குனர்

3. செல்வி. சதரூபா சன்யால் - கொல்கத்தா - தயாரிப்பாளர், இயக்குனர், நடிகை 4. திரு. எம். வி. ரகு - ஹைதெராபாத் - இயக்குனர், எழுத்தாளர், ஒளிப்பதிவாளர் 5. செல்வி. மஞ்சு போரா - குவஹாத்தி - இயக்குனர், எழுத்தாளர் 6. திரு. சந்தீப் சேனன் - கொச்சி - தயாரிப்பாளர் 7. திரு. முகேஷ் மெஹ்தா - சென்னை - தயாரிப்பாளர் 8. திரு. ஆர். மாதேஷ் - சென்னை - இயக்குனர், எழுத்தாளர் 9. திரு. எஸ். விஜயன் - சென்னை - ஸ்டண்ட் மாஸ்டர் 10. திரு. ஸ்ரீகர் பிரசாத் - சென்னை - எடிட்டர் 11. செல்வி. வாசுகி பாஸ்கர் - சென்னை - கோஷ்டியும் டிசைனர் 12. செல்வி. தினேஸ் கால்வாசிவால - மும்பை - தயாரிப்பாளர், இயக்குனர், எழுத்தாளர் 13. திரு. ராகுல் போலே - வதோதரா - இயக்குனர், எழுத்தாளர், எடிட்டர் 14. திரு. ஷகாஜீட் டே - டெல்லி - தயாரிப்பாளர், எழுத்தாளர் 15. திரு. அசோக் ரானே - மும்பை - இயக்குனர், எழுத்தாளர், எடிட்டர் 16. திரு. என். ஆர். நஞ்சுண்டே கவுடா - பெங்களூர் - இயக்குனர் ஆஸ்கார் விருதுக்கு பரிந்துரைப்பதற்காக பரிசீலக்கப்பட்ட திரைப்படங்களின் பெயர்கள் - 2023 1 பாலகம் - தெலுங்கு 2 தி கேரளா ஸ்டோரி - ஹிந்தி 3 12வது பெயில் - ஹிந்தி 4 ஸ்விகடோ - ஹிந்தி 5 ராக்கி ஆர் ராணி கிய் பிரேம் கஹானி - ஹிந்தி 6 தி ஸ்டோரிடெல்லேர் - ஹிந்தி 7 மியூசிக் ஸ்கூல் - ஹிந்தி

8 மிஸஸ். சட்டர்ஜீ வெர்சஸ் நோர்வே - ஹிந்தி 9 விடுதலை பார்ட் 1 - தமிழ் 10 குஹூம்மர் - ஹிந்தி 11 தசரா - தெலுங்கு 12 காதர் 2 - ஹிந்தி 13 வால்வி - மராத்தி 14 மாமன்னன் - தமிழ்

15 பாப்லயோக் - மராத்தி 16 தி வாக்சின் வார் - ஹிந்தி 17 சார் - தெலுங்கு 18 வாத்தி - தமிழ் 19 அபி டொஹ் சப் பகவான் பரோஸ் - ஹிந்தி 20 விருபாக்ஷா - தெலுங்கு

21 2018 எவரிஒன் ஈஸ் எ ஹீரோ - மலையாளம் 22 ஆகஸ்ட் 16, 1947 - தமிழ் தமிழ் படங்கள் (4) விடுதலை பாகம் 1 வாத்தி மாமன்னன் ஆகஸ்ட் 16,1947 தெலுங்கு படங்கள் (4) பாலகம் தசரா சார் விருபாக்ஷா ஹிந்தி படங்கள் (11) தி கேரளா ஸ்டோரி 12 ஃபீலி பெயில் ஸ்விகடோ ராக்கி ஆர் ராணி கிய் பிரேம் கஹானி தி ஸ்டோரி டெல்லர் மியூசிக் ஸ்கூல் மிசஸ். சட்டர்ஜி வெர்சஸ் நார்வே குஹூம்மர் காதர் 2 தி வாக்சின் வார் அபி டொஹ் சப் பகவான் பரோஸ் மலையாள படங்கள் (1) 2018 எவரிஒன் ஈஸ் எ ஹீரோ மராத்தி படங்கள் (2) வால்வி பாப்லயோக்

## தங்கம் சினிமாஸ் தயாரிப்பில் சி வி குமார் உதவியாளர் விஜய் கார்த்திக் இயக்கத்தில் முன்னணி இயக்குநர் சீனு ராமசாமி நடிகராக அறிமுகமாகும் புதிய திரைப்படத்தின் முதல் காட்சியை இயக்கி படத்தை துவக்கி வைத்தார் தயாரிப்பாளர்-இயக்குநர் சி வி குமார்



சென்னை, செப்டம்பர் 30 2023: தங்கம் சினிமாஸ் சார்பில் எஸ் தங்கராஜ் மிகுந்த பொருட்செலவில் தயாரிக்கும் புதிய திரைப்படத்தை பிரபல தயாரிப்பாளர்-இயக்குநர் சி வி குமாரிடம் உதவி இயக்குநராக பணிபுரிந்த விஜய் கார்த்திக் எழுதி இயக்குகிறார். தேசிய விருது பெற்ற வெற்றிப்பட இயக்குநர் சீனு ராமசாமி இப்படத்தின் மூலம் நடிகராக அறிமுகம் ஆகிறார். முதல் காட்சியை சி வி குமார் இயக்க இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் இன்று இனிதே தொடங்கியது. எல்லா காலகட்டத்திற்கும் பொருந்தும் கதைக்களத்தில் இத்திரைப்படம் உருவாகிறது. இப்படத்தின் கதாநாயகனாக அருண் நடிக்க அவரது ஜோடியாக நிரஞ்சனா நடிக்கிறார். இவர்களுடன் யூடியூப் புகழ் விஜய் டியூக், ஷிமோர் ரூஸ்வெல்ட் மற்றும் பலர் நடிக்கின்றனர். நடிகராக அறிமுகம் ஆகும் சீனு ராமசாமி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரம் ஒன்றில் நடிக்கிறார். அவரது காட்சி இன்று படமாக்கப்பட்டது. புதிய சமுதாய மாற்றத்திற்கான வழிகாட்டியாக இப்படம் அமையும் என்று இயக்குநர் விஜய் கார்த்திக் நம்பிக்கையுடன் தெரிவிக்கிறார். பாதிக்கப்பட்டவர்களின் பக்கம் நிற்பதே சமூகநீதி என்ற கருத்தை ஆழமாகவும் அழுத்தமாகவும் இத்திரைப்படம் பதிவு செய்யும் என்று அவர் மேலும் கூறினார். சென்னையில் இன்று தொடங்கிய படப்பிடிப்பில் நூற்றுக்கணக்கான துணை நடிகர் நடிகைகள் பங்கு பெற்ற நிலையில் முக்கிய காட்சிகள் படமாக்கப்பட்டன. தொடர்ந்து விழுப்புரம், கோவை, பொள்ளாச்சி உள்ளிட்ட இடங்களில் படப்பிடிப்பு நடைபெற உள்ளது. இப்படத்தின் ஒளிப்பதிவை ஏ எஸ் சூரியா கவனிக்க, படத்தொகுப்பை வி பி வெங்கட் கையாளுகிறார், எஸ் ஆர் ஹரி இசையமைக்கிறார், ஸ்வேதா தங்கராஜ் உடைகளை வடிவமைக்கிறார். இணை தயாரிப்பு: எஸ் ஸ்ரீராம்

தங்கம் சினிமாஸ் எஸ் தங்கராஜ் தயாரிப்பில், விஜய் கார்த்திக் கதை, திரைக்கதை, வசனம், இயக்கத்தில் முன்னணி இயக்குநர் சீனு ராமசாமி நடிகராக அறிமுகமாகும், பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் நிற்பதே சமூக நீதி என்பதையும் இது அனைத்து சமூகங்களுக்கும் பொருந்தும் என்பதையும் உரக்கச் சொல்லும் புதிய திரைப்படத்தின் படப்பிடிப்பு இன்று தொடங்கியது.

## டிவிஎஸ் ஐஎல்பி நிறுவனம், நியூ தமிழ்நாடு வேர்ஹவுஸ் இல் ஃபர்ஸ்ட் சோலார் உற்பத்தி ஆலையை ஆதரிக்கும் நோக்கில் கட்டுமானத்தைத் துவங்குகிறது

சென்னை, செப்டம்பர் 30 2023: கிடங்கு துறையில் முன்னணியில் இருக்கும் டிவிஎஸ் ஐஎல்பி (டிவிஎஸ் மொபிலிட்டி குழுமத்தின் ஒரு பகுதி) சமீபத்தில் தமிழ்நாட்டின் சென்னை பிள்ளைப்பாக்கத்தில் உள்ள புதிய அதிநவீன கிடங்கில் கட்டுமானத்தை துவங்கினது. இந்த திட்டமிடப்பட்ட கிடங்கு, பிள்ளைப்பாக்கத்தில் ஃபர்ஸ்ட் சோலார் இன் முழுமையாக செங்குத்தாக ஒருங்கிணைக்கப்பட்ட சோலார் உற்பத்தி ஆலையை ஆதரிக்கும் நோக்கம் கொண்டது. அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட ஃபர்ஸ்ட் சோலார் ஒரு முன்னணி அமெரிக்க சோலார் தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி நிறுவனமாகும். 570,000 சதுர அடி பரப்பளவு கொண்ட இந்த இடம், ஃபர்ஸ்ட் சோலார் இன் மூலப்பொருட்கள் மற்றும் சரக்குகளை நிலைநிறுத்துவதற்கான இடமாக பயன்படுத்தப்பட உள்ளது. அதன் அளவைத் தாண்டி, சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள உள்ளூர் சமூகத்தில், இப்பகுதியின் வளர்ச்சி மற்றும் அதிகாரமளிப்புக்கு பங்களிக்கும் 200 வேலை வாய்ப்புகளை உருவாக்கி ஒரு அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்தவும், இந்தத் திட்டம் தயாராக உள்ளது.

இந்த வசதியானது, சரியான நேரத்தில் தீர்வுகளை வழங்குவதில் டிவிஎஸ் ஐஎல்பி இன் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டும் விதத்தில் 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஃபர்ஸ்ட் சோலார் ஆலைக்கு அருகில் உள்ள இந்த மூலோபாய இடம், திறமையான பணிப்போக்குகளை செயல்படுத்தும் சரக்குகளின் தடையற்ற நிறைவை அனுமதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டமானது, காப்புறையுடன் கூடிய ஆற்றல்-திறனுள்ள நடைமுறைகள், நவீன விளக்கு அமைப்புகள் மற்றும் சோலார் பேனல்கள் போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் ஒருங்கிணைப்பு உள்ளிட்ட பல்வேறு நிலைத்தன்மை முயற்சிகளின் ஒரு வரம்பை உள்ளடக்கும். கூடுதலாக, நீர்-திறனுள்ள சாதனங்கள், மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் புதுமையான நீர் மறுசுழற்சி நுட்பங்கள் ஆகியவை நீர் மேலாண்மைக்கான ஒரு நிலையான அணுகுமுறையை ஊக்குவிக்கும். சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டுமானப் பொருட்கள் மற்றும் குறைந்த வி ஓ சி வண்ணப்பூச்சு ஆகியவற்றின் பயன்பாடு இந்த திட்டத்தின் கார்பன் தடயத்தைக் குறைக்கும்.

டிவிஎஸ் ஐஎல்பி இன் சி ஓ ஓ மணிகண்டன் ராமச்சந்திரன், "இந்த மூலோபாய இடம் ஃபர்ஸ்ட் சோலார் தொழிற்சாலைக்குள் நேரம், இருப்பு மற்றும் இட பயன்பாட்டு செலவுகளை குறைக்கும் நோக்கம் கொண்டது. உற்பத்தி நிறுவனங்களுக்கு அவற்றின் தொழிற்சாலைகளுக்கு அருகில் கிடங்குகள் தேவைப்படுவதன் முக்கியத்துவத்தை நாங்கள் புரிந்துகொள்கிறோம், மேலும் ஃபர்ஸ்ட் சோலார் ஆலைக்கு அருகில் எங்களின் மூலோபாய நிலம் கையகப்படுத்தல் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான எங்கள் அர்ப்பணிப்பை வலியுறுத்துகிறது.

ஃபர்ஸ்ட் சோலார் நிறுவனத்தின் துணைத் தலைவரும், நாட்டின் நிர்வாக இயக்குநருமான சுஜோய் கோஷ், "டிவிஎஸ் ஐஎல்பி நிறுவனம் இந்த கிடங்கு உள்கட்டமைப்பின் முக்கியமான பகுதியை சென்னையில் எங்கள் ஆலைக்கு அருகில் அமைக்க தேர்ந்தெடுத்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். சரக்கு மற்றும் திறன் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான எங்கள் முயற்சியில் இந்த கிடங்கு ஒரு முக்கிய பங்கு வகிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்." என்று கூறினார்.

இந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் டிவிஎஸ் ஐஎல்பி இன் நுழைவானது, அதன் பல்துறை மற்றும் பல்வேறு தொழில்களின் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதற்கான அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாக இருக்கிறது. டிவிஎஸ் ஐஎல்பி ஆனது, எஃப் எம் சி ஜி, எஃப் எம் சி டி மற்றும் ஆட்டோமொபைல் துணை பாகங்கள் போன்ற துறைகளில் வாடிக்கையாளர்களுக்கு ஒரு நம்பகமான கூட்டாளராகத் தொடர்கிறது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# சின்ன படங்கள் எடுக்க நினைப்போர் வரவேண்டாம் என விஷால் கூறியது சரியா..? ; "யார் படங்களை எடுக்கவேண்டும் என கூற யாருக்கும் உரிமையில்லை" ; "விஷால் சொன்னது கூட ஒருவகையில் சனாதானம் தான்"

## 'எனக்கு என்டே கிடையாது' பட விழாவில் சூடான தயாரிப்பாளர் கார்த்திக்




சென்னை, செப்டம்பர் 30 2023: ஹங்கிரி உல்ப் என்டர்டைன்மென்ட் அண்ட் ப்ரொடக்ஷன் எல் எல் பி சார்பில் கார்த்திக் வெங்கட்ராமன் தயாரிப்பில் உருவாகியுள்ள படம் 'எனக்கு என்டே கிடையாது'. அறிமுக இயக்குநர் விக்ரம் ரமேஷ் இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியுள்ளதுடன் படத்தின் முதன்மை கதாபாத்திரங்களில் ஒருவராகவும் நடித்துள்ளார்.

தயாரிப்பாளரான கார்த்திக் வெங்கட்ராமன் இன்னொரு முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்க, கதாநாயகியாக ஸ்வயம் சித்தா நடித்துள்ளார். மேலும் சிவகுமார் ராஜு, பிச்சைக்காரன் புகழ் முரளி சீனிவாசன், சக்திவேல் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

தளபதி ரத்னம் இந்த படத்திற்கு ஒளிப்பதிவு செய்துள்ளார். கலாச்சரண் இந்த படத்திற்கு இசையமைத்துள்ளார். சந்திரமுகி 2, யாத்திசை உள்ளிட்ட படங்களில் பணியாற்றிய ஸ்டண்ட் இயக்குனர் ஓம் பிரகாஷ் இந்த படத்தின் சண்டைக் காட்சிகளை வடிவமைத்துள்ளார். படத்தொகுப்பை வேல்முகனும் கலை வடிவமைப்பை சூர்யாவும் கவனித்துள்ளார்.

அக்டோபர் 6 ஆம் தேதி இந்த படம் திரையரங்குகளில் வெளியாக இருக்கிறது. ஆக்சன் ரியாக்சன் சார்பில் ஜெனிஷ் இந்தப்படத்தை வெளியிடுகிறார். இதனை முன்னிட்டு தற்போது இந்த படத்தின் ப்ரீ ரிலீஸ் புரமோஷன் நிகழ்ச்சி சென்னை சாலிகிராமம் பிரசாத் லேபில் இன்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் சினிமாவை சேர்ந்த பிரபலங்கள் என யாருமே சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்காமல் படக்குழுவினர் மட்டுமே கலந்து கொண்டனர்.

தயாரிப்பாளர் கார்த்திக் பேசும்போது, "அடிப்படையில் வழக்கறிஞர் என்றாலும் நடிப்பின் மீதுள்ள ஆர்வத்தில் தியேட்டர் ஆர்டிஸ்ட் ஆகவும் பயிற்சி எடுத்தேன். கடந்த ஏழு வருட தவமாக தற்போது இந்த படத்தை தயாரித்துள்ளேன். இந்த ஏழு வருடங்களில் ஒவ்வொரு முறையும் இந்த படத்தை துவங்க முயற்சிக்கும்போது சில தடங்கல்கள் ஏற்பட்டு முயற்சி தள்ளிப்போனது. ஆனாலும் 'எனக்கு என்டே கிடையாது' என்கிற எங்கள் படத்தின் டைட்டிலை எனக்கு நானே சொல்லி உற்சாகப்படுத்திக் கொண்டேன்.

விக்ரம் ரமேஷ் என்னை சந்தித்து சொன்ன கதை தனித்துவமாக இருந்தது. இந்த படத்தின் படப்பிடிப்பை துவங்குவதற்கு முன்பாக சில விஷயங்களில் தீர்மானமாக இருந்தேன். படப்பிடிப்பில் யாரும் யாரையும் திட்டக்கூடாது. கோபத்தைக் காட்டக் கூடாது. படப்பிடிப்பில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அன்றைய தின ஊதியத்தை அவர்கள் கேட்காமலேயே தேடிச்சென்று கொடுத்து விட வேண்டும்.. எல்லோருக்கும் சரிசமமான உணவு வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தென்.. படப்பிடிப்பு நடந்த 35 நாட்களிலும் அதை இடைவிடாமல் கடைபிடித்து முதல் படத்திலேயே இதை சாதித்தும் விட்டேன்.

இந்த படத்தில் மூன்று பேருக்கு இடையே ஏற்படும் ஒரு சிறிய போராட்டம் ஒன்று இருக்கிறது. இதற்கு ஸ்டண்ட் மாஸ்டரை வைத்து படமாக்கினால் நன்றாக இருக்கும் என்பதால் ஓம் பிரகாஷை அழைத்தோம். அவர் அதை ஒரு பிரமாதமான சண்டைக் காட்சியாகவே அமைத்துக் கொடுத்தார். யாத்திசை போன்ற படத்தில் 300 பேருக்கு மேல் வைத்து சண்டை காட்சிகளை உருவாக்கியவர் வெறும் மூன்று பேருக்கான சண்டைக் காட்சியையும் அழகாக வடிவமைத்து கொடுத்தார்.

சமீபத்தில் நடிகர் விஷால் பேசும்போது மூன்று கோடி, நான்கு கோடி வைத்துக்கொண்டு சின்ன படங்களை தயாரிக்கிறோம் என யாரும் வர வேண்டாம் என கூறியிருந்தார். இதுவே ஒரு விதமான சனாதானம் தான்.. இப்படி சொல்ல யாருக்குமே உரிமை இல்லை" என்று கூறினார்.

தயாரிப்பாளர் கார்த்திக்கின் வழிகாட்டியாக அவருக்கு பக்கபலமாக துணை நிற்கும் சக்தி என்பவர் பேசும்போது, "எனக்குள் இருக்கும் இலக்கிய ஆர்வம் தான் என்னை இந்த இடத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. விக்ரம் ரமேஷ் முதல் பட இயக்குநர் மாதிரியே இல்லை.. தயாரிப்பாளர் கார்த்திக்கை பொறுத்தவரை, தான் இருக்கும் இடங்களில் யாரும் மோசமான வார்த்தைகள் பேசுவதை விரும்ப மாட்டார். யாரையும் மரியாதை குறைவாக நடத்த மாட்டார். முக்கியமாக தனிநபராக இல்லாமல் எல்லோரும் கூட்டாக சேர்ந்து வெற்றி பெற வேண்டும் என விரும்புபவர். இந்த படத்தின் இசையமைப்பாளர் கலாசரணின் திறமையை பார்க்கும்போது இத்தனை நாளாக இவர் எப்படி வெளியே தெரியாமல் இருந்தார் என்கிற ஆச்சர்யம் ஏற்பட்டது" என்று கூறினார்.

இப்படத்தின் வெளியீட்டு உரிமையை பெற்றுள்ள விநியோகஸ்தார் ஜெனிஷ் பேசும்போது, "சமீபத்திய நிகழ்வில் நடிகர் விஷால் சின்ன படங்களை எடுப்பவர்கள் தயவு செய்து சினிமாவுக்கு வர வேண்டாம் அதற்கு பதிலாக அந்த காசில் சொத்து வாங்கி போடுங்கள் என்று கூறியதை அவர் சொன்ன ஒரு அறிவுரையாக தான் நான் பார்க்கிறேன். அவர் ஒரு தயாரிப்பாளராக தனது கடந்தகால அனுபவத்திலிருந்து அப்படி கூறியுள்ளார். அவர் சொன்னது போல இன்று சின்ன பட்ஜெட் படங்களை ரிலீஸ் செய்வதிலும் ஒடிடி தளங்களில் விற்பனைக்கு கொண்டு செல்வதிலும் நிறைய சிரமங்கள் இருக்கிறது. லட்சங்களில் எடுக்கப்பட்ட படங்களை விநியோகித்து கூட நல்ல லாபம் பார்த்தேன். அதேசமயம் சமீபத்தில் ஒரு ஐந்து கோடி பட்ஜெட்டில் எடுக்கப்பட்டு வெளியான படம் வெறும் பத்து லட்சம் தான் வசூலித்தது. டாடா, குட் நைட் போன்ற சின்ன பட்ஜெட் படங்கள் நல்ல வசூல் செய்தன என்பதையும் பார்க்க வேண்டும்" என்று கூறினார்.

ஒளிப்பதிவாளர் தளபதி ரத்னம் பேசும்போது, "சமீப காலமாக நிறைய திரில்லர் படங்கள் வருகின்றன. இதில் என்ன புதிதாக பண்ண முடியும் என்கிற எண்ணம் பலருக்கும் ஏற்படும். ஆனால் இந்த படத்தில் திரைக்கதை புதிதாக இருக்கும். படத்தின் தயாரிப்பாளர் கார்த்திக்கின் குணாதிசயத்துக்காகவே இந்த படத்தில் அனைவரும் இருமடங்காக அர்ப்பணிப்புடன் வேலை பார்த்தோம். படத்தை எடுத்து முடித்த பின்பு அதை இசையமைப்பாளரும் எடிட்டரும் சேர்ந்து இன்னும் வேறு விதமாக மாற்றி விட்டார்கள்" என்று கூறினார்.

இசையமைப்பாளர் கலாசரண் பேசும்போது, "இந்தப் படத்தில் கடைசி டெக்னீசியனாக இணைந்தது நான்தான்.. சொல்லப்போனால் மொத்த படத்தையும் எடுத்து முடித்துவிட்டுத் தான் என்னிடம் வந்தார்கள்.. பாடல்களுக்கு கூட மாண்டேஜ் காட்சிகளை முன்கூட்டியே எடுத்துக் கொண்டு வந்து கொடுத்து அதற்கு பாடல்களை உருவாக்க சொன்னார்கள். அதே சமயம் எனக்கு வேண்டிய சுதந்திரத்தையும் கொடுத்தார்கள்.

இந்த படத்தில் இரண்டு பாடல்களை பரிதாபங்கள் புகழ் கோபி மற்றும் அபிஷேக் ராஜா ஆகியோர் பாடியுள்ளனர். அபிஷேக் ராஜா என் இசையில் ஏற்கனவே சில சுயாதீன பாடல்களை பாடியுள்ளார்" என்றார்.

கலை இயக்குநர் சூர்யா பேசும்போது, "இந்த படத்தின் படப்பிடிப்பில் எங்களை தேடி வந்து சம்பளத்தை கொடுத்தார்கள். சொன்ன மாதிரியே 35 நாட்களில் படத்தை முடித்து விட்டார்கள். தயாரிப்பு நிறுவனம் என சொல்வதை விட அது வானத்தைப் போல குடும்பம் என்று சொன்னால் சரியாக இருக்கும்" என்று கூறினார்.

நடிகர் சிவகுமார் ராஜு பேசும்போது, "இந்த கதாபாத்திரத்தில் நடிக்க அழைத்தபோது எனக்கே முதலில் சந்தேகமாகத் தான் இருந்தது. ஆனால் என்னை ஊக்கப்படுத்தி உற்சாகம் கொடுத்து நடிக்க வைத்தனர். முதன்முறையாக சண்டை காட்சிகளில் நடிக்க வேண்டி இருந்தது. ரிகர்சல் பண்ணும்போது தான் சினிமா என்பது விளையாட்டு கிடையாது என்பதை உணர்ந்தேன்" என்று கூறினார்.

இயக்குநர் விக்ரம் ரமேஷ் பேசும்போது, "நிறைய தயாரிப்பு நிறுவனங்களுக்கு சென்றுள்ளேன். ஆனால் இது ஒளிவு மறைவில்லாத ஒரு நிறுவனம். கதையை சொல்வதற்கு முன்பாகவே, இதுதான் பட்ஜெட். நான் தான் ஹீரோவாக நடிக்கப் போகிறேன். என்னுடைய நண்பர்களும் இதில் என்னுடன் இணைந்து பணியாற்றுவார்கள் என முதலிலேயே கூறிவிட்டேன். தயாரிப்பாளரும் எந்த நிபந்தனையும் விதிக்காமல் சந்தோஷமாக ஒப்புக்கொண்டார். அதுமட்டுமல்ல ரொம்பவும் தாமதப்படுத்தாமல் கதை சொன்ன ஒரு வாரத்திலேயே படத்தையும் துவங்கி விட்டார்கள்.

இந்த படத்தில் மஸ்தான் கதாபாத்திரத்தில் சிவகுமார் ராஜு நடித்துள்ளார். இவர் நிறைய குறும்படங்களில் நடித்த அனுபவம் கொண்டவர் இவருக்கு முன்னதாக இந்த கதாபாத்திரத்தில் பிரபலமான இன்னொரு நடிகரை நடிக்க வைக்க முடிவு செய்திருந்தோம் ஆனால் கடைசி நேரத்தில் இவரே நடிக்கட்டும் என முடிவெறுத்தோம். இந்த படத்திற்கு பாடல்கள் சிச்சுவேஷன் சொல்வதற்கு பதிலாக முழு படத்தின் கதையும் சொன்னேன். பாடலாசிரியர் ஸ்ரீனி அதற்கு ஏற்றார்போல அருமையான பாடல்களை எழுதிக் கொடுத்தார்.

ஒரு படத்துக்கு தேவை நல்ல கதை.. ஒரு நல்ல தயாரிப்பு நிறுவனம்.. இவை இரண்டும் இருந்தால் யார் வேண்டுமானாலும் படம் எடுக்கலாம். இந்த படம் பார்த்துவிட்டு ரசிகர்கள் வெளியே வரும்போது படம் நல்லா இருக்கு என்று மட்டுமே சொல்வார்கள். இந்த பிரமோஷன் நிகழ்ச்சியில் படத்தின் கதாநாயகி ஏன் கலந்து கொள்ளவில்லை என்றால், அவரை எங்களால் தொடர்பு கொள்ளவே முடியவில்லை. இந்தியன் 2, கேப்டன் மில்லர் என பெரிய படங்களில் அவர் பிசியாக இருக்கிறார் என்று சொல்லப்படுகிறது.. ஒருவேளை இனி பெரிய படங்களில் தான் நடிப்பார் போல தெரிகிறது. இந்த படத்தில் நடித்துள்ள சேகர் என்கிற கதாபாத்திரம் ஒரே நாளில் பலவிதமான பிரச்சனைகள சந்திக்கும். அவரது வாழ்க்கையும் இந்த படத்தின் கதையும் முடிந்து விடும் என நினைக்கும் நேரத்தில் மீண்டும் புதிதாக இன்னொரு விஷயம் தொடரும். அதனால் தான் எனக்கு எண்டு கார்டே இல்லை என்கிற டைட்டிலை இந்த படத்திற்கு வைத்தோம்: என்று கூறினார்.

# "கிரிக்கெட் வீரர் மலிங்காவாக நடிக்க தயார்" ; ஆச்சர்யப்படுத்தும் லால் சலாம் பட ஆடை வடிவமைப்பாளர் சத்யா என் ஜெ




சென்னை, செப்டம்பர் 30 2023: சமீபத்தில் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த்துடன் இலங்கை நட்சத்திர கிரிக்கெட் வீரர் மலிங்கா இணைந்து எடுத்துக்கொண்டது போன்ற புகைப்படம் ஒன்று சோசியல் மீடியாவில் வெளியாகி மிகப்பெரிய அளவில் வைரலாகி வருகிறது. ஆனால் பலரும் நினைப்பது போல அவர் கிரிக்கெட் வீரர் மலிங்கா அல்ல.. தமிழ் சினிமாவில் பிரபல ஆடை வடிவமைப்பாளராக பணியாற்றி வரும் காஸ்ட்யூமர் சத்யா என் ஜெ தான் அவர்.

ஐஸ்வர்யா ரஜினிகாந்த இயக்கிவரும் லால் சலாம் படத்திற்கு ஆடை வடிவமைப்பாளராக பணியாற்றியுள்ள சத்யா என் ஜெ , மேலும் அந்த படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்திலும் நடித்துள்ளார். படத்தில் தான் நடித்த கதாபாத்திர தோற்றத்திலேயே சூப்பர் ஸ்டார் ரஜினியுடன் ஞாபகார்த்தமாக சத்யா எடுத்துக் கொண்ட புகைப்படம் தான் இன்று அவரை கிரிக்கெட் வீரர் மலிங்காவாக பலரையும் நினைக்க வைத்துள்ளது. மூன்று பேர் மூன்று காதல் படத்தின் மூலமாக ஆடை வடிவமைப்பாளராக தனது பயணத்தை துவங்கிய சத்யா என் ஜெ கிட்டத்தட்ட 46 படங்கள் வரை பணியாற்றி உள்ளார். ராஜா ராணி, இரும்புத்திரை, தெறி, பைரவா, ரஜினி முருகன், மான் கராத்தே உள்ளிட்ட படங்களில் பணியாற்றி உள்ளதுடன் சமீபத்தில் டைம் டிராவலை மையப்படுத்தி வெளியான மார்க் ஆண்டனி படத்தின் சவாலான ஆடை வடிவமைப்பையும் அசத்தலாக செய்து முடித்தவர் இந்த சத்யா என் ஜெ தான் என்பது இன்னொரு ஆச்சரியம்.

தனது புகைப்படம் சோஷியல் மீடியாவில் வைரலாகியுள்ள நிலையில், லால் சலாம் படத்தில் சூப்பர் ஸ்டாருடன் பணிபுரிந்த அனுபவம் குறித்தும் தற்போது இலங்கை கிரிக்கெட் வீரர் மலிங்காவாக திடீரென வைரலானது குறித்தும் உற்சாகத்துடன் பகிர்ந்து கொள்கிறார் சத்யா என் ஜெ.

"லால் சலாம் ஒளிப்பதிவாளர் விஷ்ணு ரங்கசாமி மூலமாகத்தான் அந்த படத்தில் பணியாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஆடை வடிவமைப்பாளராக மட்டுமல்லாமல் இந்த படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்திலும் நடித்துள்ளேன். கிட்டத்தட்ட 22 நாட்கள் இந்த படத்திற்காக ரஜினி சாருடன் இணைந்து பணியாற்றியது என் வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவம். ஒவ்வொரு நாளும் அவரிடம் இருந்து புதுப்புது விஷயங்களை கற்றுக் கொண்டேன். சிலபேர் வெளியில் ஒரு மாதிரியாகவும் கேரவனுக்குள் ஒரு மாதிரியாகவும் தங்கள் குணாதிசயத்தை வெளிப்படுத்துவார்கள். ஆனால் இத்தனை நாள் நான் பார்த்த மனிதர்களில் ரஜினி சார் உள்ளேயும் வெளியேயும் எப்போதுமே ஒரே மாதிரியான மனிதர்தான். எவ்வளவு உயரத்திற்கு சென்றாலும் எப்படி ஒருவர் தன்மையான மனிதனாக இருப்பது என்பதற்கு அவரைவிட வேறு சிறந்த உதாரணம் இருக்க முடியாது. இந்த படத்தில் அவருக்கான ஆடைகளை வடிவமைக்கும் பொறுப்பு கிடைத்தது மிகப்பெரிய பாக்கியம். அவரைப் பொறுத்தவரை குறை நிறை எதுவாக இருந்தாலும் நம்மிடம் வெளிப்படையாக பேசி விடுவார். ஒரு விஷயத்தை சரியாக செய்து விட்டால் ஒன்றுக்கு மூன்று முறை திரும்பத் திரும்ப நம்மை பாராட்டுவார். ஒருமுறை சிரமமான விஷயம் ஒன்றை ரொம்பவே எளிதாக செய்து முடித்தேன் அதேசமயம் இன்னொரு விஷயத்தில் இரண்டு முறை முயன்றும் சரிவரவில்லை.. அப்போது என்னிடம் அவர், என்ன சத்யா ரொம்ப கஷ்டமான விஷயத்தை எளிதாக செய்து விட்டீர்கள்.. எளிதான ஒரு விஷயத்திற்கு இவ்வளவு சிரமப்படுகிறீர்களே என்று கூறினார்..

அவர் அப்படி சொல்வது கூட நம் மீதான அக்கறை, அன்புடன் தான் இருக்கும்.. இன்னும் ஒரு முறை வாய்ப்பு கொடுங்கள் சார் என்று அவரிடமே கேட்டு அதை சரியாக செய்து முடித்தேன்.. அதில் அவருக்கும் ரொம்பவே சந்தோசம். நாம் சொல்லும் ஒரு விஷயம் சரியாக இருந்தால் எந்த ஈகோவும் பார்க்காமல் அதை மனதார ஏற்றுக்கொள்வார். படத்தில் அவருடன் இணைந்து நடிக்கும்போது என்னுடைய நடிப்பை பார்த்துவிட்டு 'சும்மா கலக்குறீங்களே' என்று ஜாலியாக கூறி உற்சாகப்படுத்துவார்.

கிட்டத்தட்ட 170 படங்கள் வரை நடித்துவிட்ட அவர் இத்தனை படங்களில் அணியாத ஆடை வகைகளே கிடையாது என்று சொல்லலாம். அந்த அளவிற்கு படத்திற்கு படம் புதிது புதிதாக பலவிதமான ஆடைகளை அவர் அணிந்து நடித்துள்ளார். அதனால் இந்த படத்தில் அவரது கதாபாத்திரத்திற்கு ஏற்ற மாதிரியும் அதேசமயம் இதுவரை அவர் அணிந்த உடைகளில் இருந்து கொஞ்சம் வித்தியாசமாகவும் மேலும் அவரது ரசிகர்களுக்கும் பிடிக்கும் விதமாகவும் ஆடைகளை வடிவமைத்துள்ளேன். இந்த மாதிரி ஒரு ரஜினியை பார்த்து ரொம்ப நாளாச்சு என்று ரசிகர்கள் ஆச்சரியமும் சந்தோஷமும் படும் வகையில் விண்டேஜ் ரஜினியை கண்முன் நிறுத்தும் விதமாக லால் சலாம் படத்தில் அவரது ஆடைகள் இருக்கும்.

இந்த படத்திற்கு பிறகும் மீண்டும் அடுத்ததாக ரஜினி சாருடன் இணைந்து பணியாற்றுவேனா இல்லையா என்பது தெரியாது. அதனால் இந்த படத்தையே அவருடன் பணியாற்ற எனக்கு கிடைத்த கடைசி வாய்ப்பாக நினைத்து, எந்த அளவிற்கு சிறப்பாக பணியாற்ற முடியுமோ அந்த அளவிற்கு வேலை செய்துள்ளேன் என நினைக்கிறேன். படம் வெளியான பிறகு அவர் அணிந்துள்ள ஆடைகளை பார்த்து அதேபோல யாரேனும் ஒருவராவது விரும்பி அணிந்தார்கள் என்றால் அதுவே எனது வேலைக்கு கிடைத்த கவுரவமாக நினைப்பேன்.

ரஜினி சாருடன் நான் எடுத்துக்கொண்ட புகைப்படம் சமீபத்தில் சோசியல் மீடியாவில் வெளியாகி பலரும் என்னை இலங்கை கிரிக்கெட் வீரர் மலிங்கா என்றே நினைத்துக் கொண்டார்கள். அது ஒருவகையில் எனக்கு பெருமை தான். அதனால் மலிங்கா போன்ற தோற்றத்திலேயே என்னை மறு உருவாக்கம் செய்து ஒரு லுக் டெஸ்ட்டும் எடுத்துக்கொண்டேன்.. ஏனென்றால் தற்போது நடிப்பிலும் தீவிர கவனம் செலுத்தி வருகிறேன். ஒருவேளை நாளை மலிங்காவின் பயோபிக் பற்றி படம் எடுக்கிறார்கள் என்றால் அந்த ஆடிசனுக்கு முதல் ஆளாக சென்று நிற்பேன்" என்று கூறுகிறார் நம்பிக்கையுடன்.

# இயக்குநர் பாலாவின் 'வணங்கான்' பட பர்ஸ்ட்லுக் போஸ்டர் வெளியானது



சென்னை, செப்டம்பர் 30 2023: மாநாடு என்கிற வெற்றிப் படத்தை தயாரித்த சுரேஷ் காமாட்சியின் வி ஹவுஸ் புரொடக்சன்ஸ் மற்றும் இயக்குநர் பாலாவின் 'பி ஸ்டுடியோஸ்' இணைந்து தயாரித்து வரும் படம் 'வணங்கான்'. தனது வித்தியாசமான படைப்புகளின் மூலம் ரசிகர்களின் மனதில் தனக்கென ஒரு தனி இடம் பிடித்துள்ள இயக்குநர் பாலா இப்படத்தை இயக்கி வருகிறார். அருண் விஜய் கதாநாயகனாக நடிக்க, கதாநாயகியாக ரோஷினி பிரகாஷ் நடிக்கிறார். முக்கிய வேடங்களில் சமுத்திரக்கனி, மிஷ்கின் ஆகியோர் நடிக்கின்றனர். ஜிவி பிரகாஷ் குமார் இசையமைக்கும் இப்படத்தின் பாடல்களை கவிப்பேரரசு வைரமுத்து எழுதுகிறார். ஒளிப்பதிவை ஆர்.பி.குருதேவ் மேற்கொள்ள படத்தொகுப்பை சதீஷ் சூர்யா கவனிக்கிறார். கலை இயக்குனராக ஆர்.பி.நாகு பொறுப்பேற்றுள்ளார். சண்டைக்காட்சிகளை சில்வா வடிவமைக்கிறார். வணங்கான் படத்தின் படப்பிடிப்பு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் தற்போது இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி உள்ளது.

கைகளில் சிலைகளை வைத்துக்கொண்டு முழுதும் சேறு படிந்த உடம்புடன் காட்சியளிக்கும் நடிகர் அருண் விஜய்யின் வித்தியாசமான தோற்றம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றுள்ளதுடன் படத்தின் மீதான எதிர்பார்ப்பையும் அதிகரித்துள்ளது

வரும் 2024 பொங்கல் பண்டிகையில் இப்படத்தை வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மக்கள் தொடர்பு ; ஏ. ஜான்.

# இளைஞர்களிடையே அதிகரிக்கும் மாரடைப்பு: காரணங்கள் மற்றும் தீர்வுகள்

டாக்டர் பிரதீப் ஜி நாயர், இன்டர்வென்ஷனல் கார்டியாலஜிஸ்ட்,
ஃபோர்டிஸ் மலர் மருத்துவமனை, சென்னை



சென்னை செப்டம்பர் 30, 2023: இளைஞர்களுக்கு மாரடைப்பு ஏற்படுவது இந்த நாட்களில் ஒரு பொதுவான மற்றும் சோகமான செய்தியாக உள்ளது. இளம் வயதிலேயே நடிகைகள், மாணவிகள், பாடகர்கள் என பலரும் மாரடைப்பால் அவதிப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். இளம் வயதிலேயே இளைஞர்களின் மாரடைப்பு எண்ணிக்கை அதிகரித்து வருவதால், இது மிகவும் கவலைக்குரியதாக உள்ளது. தமனிகளுக்குள் இரத்த உறைவு அல்லது அடைப்பு ஏற்பட்டு, இதயத்திற்கு இரத்த ஓட்டம் தடைபடும் போது மாரடைப்பு ஏற்படுகிறது. உயர்ந்த கொழுப்பு அளவுகளின் விளைவாக உருவாகும் கொழுப்பு படிவுகளால் இதயத்திற்கு இரத்த ஓட்டம் தடைபடுகிறது; இந்த தடை படிப்படியாக அல்லது திடீரென ஏற்படுத்தலாம்..

ஃபோர்டிஸ் மலர் மருத்துவமனையின் இன்டர்வென்ஷனல் கார்டியாலஜிஸ்ட் டாக்டர் பிரதீப் ஜி நாயர் கூறுகையில், இதயம் முன்னறிவிப்பின்றி பம்ப் செய்வதை நிறுத்தும்போது, □□திடீர் மாரடைப்பு ஏற்படலாம் என்கிறார். உடல் முழுவதும் ஆக்சிஜன் சப்ளை துண்டிக்கப்பட்டு, மருத்துவமனையை அணுகி மருத்துவ சிகிச்சை கூடச் பெற முடியாமல் சில நிமிடங்களில் அந்த நபர் இறந்து விடுகிறார். இந்த நிலையை உடனடி இதயச் செயலிழப்பு என்று அழைக்கப்படுகிறது.

டாக்டர் மேலும் கூறுகையில், "இன்றைய இளைஞர்கள் இதய முன் பரிசோதனை செய்யாமல் உடற்பயிற்சிக் கூடம் சென்று கடின பயிற்சிகளில் ஈடுபடுகின்றனர். சில உடற்பயிற்சிகள் மிகவும் கடினமானவை, அது இதயத்தின் தடிமனை அதிகரிக்கும். உடற்பயிற்சி பயிற்சிகள் நிறைய உடல் உழைப்பை உள்ளடக்கியது; சரியான வகையில் உடலை பக்குவப்படுத்தாமல் உடற்பயிற்சி செய்வதே மரணமாக மாறிவிடுகிறது.

இளைஞர்கள் எப்போதும் தங்கள் ஆரோக்கியத்தை சரியாகக் கவனித்துக்கொள்வதில்லை. இளம் வயதில் மாரடைப்பு வராது என்ற எண்ணத்தின் காரணத்தால் கூட இருக்கலாம். ஒருவர் தேர்வு செய்யும் வாழ்க்கை முறை, உணவுத் திட்டங்கள், உடற்பயிற்சி நடைமுறைகள் மற்றும் மன அழுத்தத்தை கையாள்வதில் அலட்சியம் ஆகியவை திடீர் மாரடைப்புத் தாக்குதலுக்கு காரணமாகிறது.

புகைபிடித்தல் என்பது எந்தவொரு நோய்க்கும் பொதுவான காரணமாகும். மாரடைப்புக்கு மிக முக்கிய காரணமாகும். இது புகைபிடிப்பவர்களை விட அவர்களின் அருகில் இருப்பவர்களையும் கூட விட்டு வைக்காது.

இருதய நோய் மரபணு காரணிகளுடனும் தொடர்புடையவை. மரபணு காரணமானது இளைய தலைமுறையினரை மற்றவரை விட சுமார் 5-10 ஆண்டுகளுக்கு முன்பே இதய பாதிப்பு ஏற்படுகிறது. மரபணு காரணமாக இருக்கும் போது, □□இருதய நோயை முற்றிலுமாகத் தடுக்க முடியாது, ஆனால் அதன் ஆபத்து காரணிகளைத் கட்டுப்படுத்தி தள்ளிப்போட முடியும்.

மன அழுத்தம் என்பது திடீர் மாரடைப்புக்கான காரணங்களில் வளர்ந்து வரும் பிரச்சனையாக இருக்கிறது. இளைய தலைமுறையினர் எல்லாவற்றிலும் மன அழுத்தத்தில் உள்ளனர். வேலையில் சிறப்பாகச் செயல்படுவதற்கான மன அழுத்தம், நகரமயமாக்கப்பட்ட வாழ்க்கை முறையைப் பராமரித்தல், அதிகப்படியான புகைபிடித்தல், மது அருந்துதல், ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கம், மன அழுத்தத்தில் இருக்கும் போது அதிகமாகச் சாப்பிடுதல் இவை அனைத்தும் இதயத்தில் அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும் காரணங்களாக இருக்கிறது.

சரியான தூக்கமின்மை திடீர் இதய அடைப்பிற்கு வழிவகுக்கும் மற்றொரு காரணியாகும். இளைஞர்கள் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறைகளை பின்பற்றுகிறார்கள், இரவில் அதிக நேரம் விழித்திருப்பது சீக்கிரம் எழுந்திருக்க முடியாததற்கு காரணமாகிறது; விளைவாக, இது அவர்களிடம் இரத்த அழுத்தத்தை அதிகமாக்கி இளம் வயதிலேயே மாரடைப்புக்கான காரணத்தை அதிகரிக்கிறது. துரதிர்ஷ்டவசமாக, மாரடைப்பைப் போலவே, உயர் இரத்த அழுத்தமும் வயதானவர்களை விட இளைஞர்களிடையே அதிகரித்து வருகிறது. உயர் இரத்த அழுத்தம் உங்கள் இதய தசைகளை தடிமனாக்குகிறது, உங்கள் இரத்த நாளங்களை பாதிக்கிறது மற்றும் மாரடைப்பு அபாயத்தை அதிகரிக்கிறது.

கோவிட் இந்த வகையில் புதிதாக சேர்ந்துள்ளது. கோவிட் 19 நுரையீரல் நோயாக இருந்தாலும், கோவிட்-ன் பல்வேறு பின்விளைவுகளால் இதயமும் பாதிக்கப்படுகிறது. வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் ஒழுங்கற்ற இதயத் துடிப்பு அல்லது படபடப்பு, இதயத் தசை வீக்கம் மற்றும் சராசரி அளவை விட இரத்த நாளங்களில் அடைப்பு போன்றவற்றினால் பாதிக்கப்படுகின்றனர். வயதில் முதியவரிடம் நிலவக் கூடிய இந்த நிலை தற்போது இளைய வயதினரிடையேயும் காணப்படுகிறது. கோவிட் தொற்றுக்கு உள்ளான இளைஞர்கள், தாங்கள் குணமடைந்துவிட்டோம் என்ற எண்ணத்தில் அதிக தீவிரம் கொண்ட உடற்பயிற்சிகளைச் செய்யத் தொடங்குகிறார்கள். நீண்ட ஓட்டத்திற்குச் செல்வது, கோவிட் நோயிலிருந்து மீண்டவுடன் புகைபிடிக்கவும் தொடங்குகிறார்கள். இவை இதயத்தை மேலும் சேதப்படுத்தி அரித்மியா, இதய செயலிழப்பிற்கு வழிவகுக்கிறது. 30-45 வயதிற்குட்பட்டவர்களிடையே அரித்மியா அதிகரித்து வரும் போக்கையும் மருத்துவ நிபுணர்கள் இப்பொழுது பார்க்கிறார்கள்.

தடுப்பு நடவடிக்கைகள்.

இதயத்தை ஆரோக்கியமாக பராமரிக்க முதல் படி இதய முன் பரிசோதனை ஆகும். ஒரு நபருக்கு இதய நோய்களின் குடும்ப வரலாறு இருந்தால் மற்றும் கோவிட் பாசிட்டிவ் சோதனை செய்யப்பட்டிருந்தால், உடனடியாக உதவிக்கு இருதயநோய் நிபுணரை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இளைஞர்கள் உடல் உழைப்பற்ற வாழ்க்கை முறையை மாற்ற வேண்டும், அதிகப்படியான சர்க்கரை உட்கொள்ளலைத் தவிர்க்க வேண்டும், கொழுப்பு உட்கொள்ளலைக் கட்டுப்படுத்த வேண்டும், புகைபிடித்தல் மற்றும் குடிப்பதை நிறுத்த வேண்டும், இது இருதய நோய்க்கான வாய்ப்புகளை அதிகரிக்கிறது என்று மருத்துவர் மேலும் கூறுகிறார். உடற்பயிற்சியின் போது அதிக சிரமமான உடற்பயிற்சியை செய்வது, அதிகமாக குடித்த பிறகு உடற்பயிற்சி செய்வது போன்ற செயல்கள் உடலில் ஆக்சிஜன் அளவை திடீரெனக் குறைய வழிவகுக்கும்". கோவிட் சிகிச்சைக்குப் பின் மிகவும் பரிந்துரைக்கப்படுவது மிதமான உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதேயாகும். ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை பின்பற்றி இதய நோயற்ற வாழ்வை வாழ மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

# சோஸியல் இம்பாக்ட் புரோகிராம் மூலம் டைப் 1 நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட 1300-க்கும் மேற்பட்ட குழந்தைகள் நேர்மறையான பலன்களை அடைகிறார்கள்

சென்னை, செப்டம்பர் 30, 2023: ரிஸெர்ச் சொஸைட்டி ஃபார் தி ஸ்டடி ஆஃப் டயாபட்டீஸ் இன் இந்தியா மற்றும் சனோஃபி ஆகியவற்றுக்கு இடையேயான மூன்றாண்டு கால கூட்டாண்மையானது, டைப் 1 நீரிழிவு நோயுடன் வாழும் குழந்தைகளின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை உண்டாக்கத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, தமிழகத்தைச் சேர்ந்த 208 பேர் உட்பட, நாடு முழுவதும் 1300-க்கும் மேற்பட்ட இளம் டி 1 டி நோயாளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்தை பீப்பிள்-டு-பீப்பிள் ஹெல்த் ஃபவுண்டேஷன் எனும் அமைப்பு செயல்படுத்துகிறது.

இந்த 1300 குழந்தைகள், டி1டி பராமரிப்பின் கீழ் சிறந்த கல்வியைப் பெறுகின்றனர். கடந்த 9 மாதங்களில் (செப்டம்பர் 2022 முதல் ஜூன் 2023 வரை), இத்திட்டத்தின் தீர்வு நடவடிக்கையானது, ஹைப்போக்ளைசீமியா எனும் இரத்தச் சர்க்கரைக் குறைவால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையை (வாரத்திற்கு 1 முதல் 4 முறை) 46% (வி எஸ். 70%) குறைந்துள்ளதுடன், ஹைப்பர் கிளைசீமியா எனும் இரத்தச் சர்க்கரை மிகுதியால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை (வாரத்திற்கு 1 முதல் 4 வரை) வாரத்திற்கு முறை) 25% (வி எஸ். 52%) குறைந்துள்ளது.

சர்வதேச டைப் 1 நீரிழிவு குறியீட்டின்படி, இந்தியாவில் டைப் 2 நீரிழிவு நோயானது ஆண்டுக்கு 4.4% அதிகரித்து வருவதுடன் ஒப்பிடும்போது, டி1டி ஆனது ஒவ்வொரு ஆண்டும் 6.7% அதிகரித்து வருகிறது. சிறார் அல்லது இன்சுலின் சார்ந்த நீரிழிவைப் பொறுத்தவரை, இந்தியாவில் டைப் 1 நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களைப் பராமரிப்பவர்கள் நீரிழிவு நோயைப் பராமரிப்பதில் தொடர்ந்து சவால்களை எதிர்கொள்கின்றனர். ஏனென்றால், டைப் 1 நீரிழிவு-க்கான சிகிச்சை மற்றும் பராமரிப்பிற்கு மிகவும் குறைவான அர்ப்பணிப்புள்ள மருத்துவர்கள் மற்றும் பயிற்றுநர்களே பயிற்சி பெற்றுள்ளனர். மக்களுக்கு டைப் 1 நீரிழிவு பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாமை, சமூகப் பொருளாதார சுமை மற்றும் குறிப்பாக சிறுநகர்ப்புறங்கள் மற்றும் கிராமப்புறங்களில் முறையான சுகாதார வசதிகளுக்கான அணுகல் ஆகியவை பிற சாவால்கள் ஆகும். காலங்கடந்து நோயறிதல், இன்சுலினுக்கான மோசமான கோல்ட்-செயின் பராமரிப்பு மற்றும் நோயாளிகள் மற்றும் கவனிப்பாளர்களுக்கு போதிய புரிதலின்மை ஆகியவை பிற சிக்கல்களில் அடங்கும். இன்சுலினுக்கான அணுகல், டெஸ்ட் ஸ்ட்ரிப்ஸ் மற்றும் நல்ல சுய பராமரிப்பு ஆகியவை ஒரு நபருக்கு 21.2 ஆண்டுகள் ஆரோக்கியமான வாழ்க்கையை மீட்டெடுக்க உதவும்.

டாக்டர் பிரிஜ் மக்கர்

பிரஸிடென்ட் - ரிஸெர்ச் சொஸைட்டி ஃபார் தி ஸ்டடி ஆஃப் டயாபட்டீஸ் இன் இந்தியா

"இந்தியாவில் 8.6 லட்சம் டைப் 1 நீரிழிவு நோயாளிகள் உள்ள நிலையில், இந்த நிலையில் வாழும் குழந்தைகளின் அவசரத் தேவைகளை எங்களால் கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது."

டாக்டர் சஞ்சய் அகர்வால்

செயலாளர் ஸ்ரீ ரிஸெர்ச் சொஸைட்டி ஃபார் தி ஸ்டடி ஆஃப் டயாபட்டீஸ் இன் இந்தியா

"இத்திட்டத்திற்காக, ஆர் எஸ் எஸ் டி ஐ மற்றும் சனோஃபி இந்தியா ஆகியவை உலகளாவிய பரிந்துரைகளின்படி இந்தியா முழுவதும் சிகிச்சைக்கான அணுகலை வழங்கக்கூடிய சர்வதேச தரநிலையிலான சிகிச்சை வசதியை உருவாக்கும் வகையில், தங்களின் அனுபவத்தையும் நிபுணத்துவத்தையும் ஒருங்கிணைக்கின்றன. ஆர் எஸ் எஸ் டி ஐ இந்தியாவில் டி 1 டி சிகிச்சைக்கான கட்டமைப்பை உருமாற்ற அர்ப்பணித்துள்ளது."

இந்த சோஸியல் இம்பாக்ட் புரோகிராம்-ஆனது, இந்தியா முழுவதும் உள்ள பயிற்சி பெற்ற சுகாதார வல்லுநர்கள் (எச் சி பி கள்) மற்றும் டி1 டி பயிற்றுநர்கள் ஆகியோர் அடங்கிய நெட்வொர்க் மூலம் ஒரு ஆதரவு திட்டத்தை உருவாக்குவதன் மூலம் டி1டி நோயாளிகளின் ஆரோக்கிய நிலையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பயிற்சி டாக்டர்கள் சரியான நோயறிதல் மற்றும் நோய்ப் பராமரிப்பை செயல்படுத்தவதன் மூலம், இது நாட்பட்ட சிக்கல்கள் ஏற்படுவதைக் குறைக்க வழிவகுக்கும்.

திருமதி அபர்ணா தாமஸ்

சீனியர் டைரக்டர், கார்ப்பரேட் கம்யூனிகேஷன்ஸ் மற்றும் கார்ப்பரேட் சோஸியல் ரெஸ்பான்சிபிலிட்டி, சனோஃபி இந்தியா லிமிடெட்

"இந்தியாவில் டைப் 1 நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட பல குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தை மிகத் துரிதமாக மேம்படுத்தும் எங்கள் சமூகநலத் திட்டத்தின் தீர்வு நடவடிக்கையின் தாக்கத்தைக் காண நாங்கள் பெரிதும் ஆர்வமடைந்துள்ளோம். டைப் 1 நீரிழிவு நோயைக் கண்டறிதல், அதுபற்றிய புரிதல் மற்றும் ஆலோசனை ஆகியவற்றிற்கு மிகவும் அவசியமான உயர்தரமான சிகிச்சையை உருவாக்க இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், மருத்துவர்கள் மற்றும் பயிற்றுநர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக டி1டி பயிற்சியை எளிதாக்குகிறது. இதன் மூலம், டி1டி-க்கான நோயறிதல், சிகிச்சை மற்றும் கவனிப்புக்கான அணுகலை வழங்குகிறது. மேலும், சனோஃபி இந்தியா-வின் சமூக தாக்கத் திட்டமானது, டி1டி ஐ சிறந்த முறையில் பராமரிப்பதற்கான சிகிச்சையை அணுக நிதியுதவி தேவையுள்ள 1300 குழந்தைகளுக்கு இலவச இன்சுலின் நிதியை வழங்குகிறது."

டாக்டர் விஜய் விஸ்வநாதன்

பொது மருத்துவர், இன்டேர்னல் மெடிசின்

# இந்தியாஃபர்ஸ்ட் லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனம் உத்தரவாதமான சிங்கிள் பிரீமியம் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது

சென்னை, செப்டம்பர் 30 2023: இந்தியாஃபர்ஸ்ட் லைஃப் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (இந்தியாஃபர்ஸ்ட் லைஃப்) ஒரு தனித்துவமான சலுகையை அறிமுகப்படுத்தியுள்ளது - இந்தியாஃபர்ஸ்ட் லைஃப் உத்தரவாத ஒற்றை பிரீமியம் திட்டம். இந்த தனித்துவமான திட்டம் தனிநபர்களுக்கு நிதி பாதுகாப்பு மற்றும் சேமிப்பின் தடையற்ற கலவையை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது. இது அவர்களின் நீண்டகால பாதுகாப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது, அதே நேரத்தில் எதிர்கால சந்ததியினருக்கான பாரம்பரியம் மற்றும் செல்வத் திட்டமிடலுக்கு உதவுகிறது.

இந்தியாஃபர்ஸ்ட் லைஃப் உத்தரவாத ஒற்றை பிரீமியம் திட்டம் (ஜி.எஸ்.பி.பி) என்பது இணைக்கப்படாத, பங்கேற்காத, தனிப்பட்ட, ஒற்றை பிரீமியம் சேமிப்பு திட்டமாகும், இது நீண்ட பாலிசி காலத்திற்கு வாடிக்கையாளருக்கு உத்தரவாதமான வருமானத்தை வழங்குகிறது. பாலிசி தொடங்குவதற்கு முன்பு ஒரு மொத்த பிரீமியம் செலுத்துவதன் மூலம், வாடிக்கையாளர்கள் ஒரே பாலிசியிலிருந்து நிதி பாதுகாப்பு மற்றும் சேமிப்பின் இரட்டை நன்மைகளைப் பெறலாம்

வாடிக்கையாளர்கள் ஒரு பிரீமியத்திற்கு பதிலாக 1.25 மடங்கு அல்லது 10 மடங்கு ஆயுள் காப்பீடு உட்பட பல விருப்பங்களிலிருந்து தங்களுக்கு விருப்பமான ஆயுள் காப்பீட்டு விருப்பத்தைத் தேர்வு செய்ய நெகிழ்வுத்தன்மையைக் கொண்டுள்ளனர். இந்த தனித்துவமான தனிப்பயனாக்கம் தனிநபர்கள் தங்கள் நீண்டகால நிதி இலக்குகளுடன் தங்கள் கவரேஜை ஒருங்கிணைக்க அதிகாரம் அளிக்கிறது.

பாலிசி காலம் (ஆண்டுகளில்) 5, 10, 15, 20, 25 மற்றும் 30 ஆகும்.

உத்தரவாத முதிர்வு காரணி (ஜிஎம்எம்) 1.25, 1.75, 2.5, 3.5, 5.7

இது குறித்து இந்தியாஃபர்ஸ்ட் லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் துணை தலைமை நிர்வாக அதிகாரி ருஷப் காந்தி கூறுகையில், "வட்டி விகிதங்கள் எதிர்காலத்தில் நிலையானதாக இருக்கும் என்றும், நடுத்தர முதல் நீண்ட காலத்திற்கு மோடரேட் செய்யத் தொடங்கும் என்றும் நாங்கள் கருதுகிறோம். அத்தகைய சூழ்நிலையில் இது நன்மை பயக்கும். வாடிக்கையாளர்கள் நடைமுறையில் உள்ள அதிக வட்டி விகிதங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் மற்றும் உத்தரவாதமான வருமானத்தை நீண்ட காலத்திற்கு பூட்டலாம். இந்தியாஃபர்ஸ்ட் லைஃப் உத்தரவாத ஒற்றை பிரீமியம் திட்டம் 30 வருட பாலிசி காலத்திற்கு 7 மடங்கு வருமானத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது. இது ஓய்வூதிய திட்டமிடல் மற்றும் பாரம்பரியம் ஆகிய இரண்டிற்கும் ஒரு சிறந்த தயாரிப்பாக அமைகிறது. இந்த ஈர்ப்பைக் கருத்தில் கொண்டு, எங்கள் வங்கி அஷ்யூரன்ஸ் கூட்டாளிகள், பாங்க் ஆஃப் பரோடா மற்றும் யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா மூலம் இந்த தயாரிப்பை விரிவாக சந்தைப்படுத்தவும், அச்சு, வெளிப்புற மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் உள்ளிட்ட 360 டிகிரி சந்தைப்படுத்தல் பிரச்சாரத்துடன் அவர்களின் முயற்சிகளை ஆதரிக்கவும் நாங்கள் விரும்புகிறோம்."

இந்தியாஃபர்ஸ்ட் லைஃப் உத்தரவாத ஒற்றை பிரீமியம் திட்டம் இந்தியாஃபர்ஸ்ட் லைப்பின் 50 தேவை அடிப்படையிலான தயாரிப்பு வழங்கல்களின் டைனமிக் போர்ட்ஃபோலியோவில் (சில்லறை மற்றும் குழு போர்ட்ஃபோலியோக்களில் 31 சில்லறை விற்பனை, 13 குழு மற்றும் 06 ரைடர்கள்) மற்றொரு கூடுதலாகும். இந்த தயாரிப்புகள் நாடு முழுவதும் நிறுவனத்தின் விரிவான மற்றும் ஆழமான விநியோக திறன்களை பூர்த்தி செய்கின்றன.